# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

## பகுதி II

10

1915-ம் ஆண்டு முதலாம் உலக யுத்த நெருக்கடிகளுக்கு மத்தியில் இங்கிலாந்துக்குச் சென்ற சேர் பொன்னம்பலம் இராமநாதன்- பிரித்தானிய அரசுடன், முஸ்லீம்களுக்கு எதிரான கலவரத்தை தூண்டியதற்காக மரண தண்டனை விதிக்கப்பட்ட, மற்றும் சிறை வைக்கப்பட்ட சிங்களவர்களுக்காக வாதாடினர்.

கொழும்பிலுள்ள பிரித்தானிய தேசாதிபதி சிங்கள முஸ்லீம் கலவரம் தொடர்பான விடயத்தில் சிங்களவர்களுக்கு பாதகமான விதத்தில் நடந்து கொண்டுள்ளதாக அவர் குற்றஞ் சாட்டினார். கலவரத்தை அடக்கப் பயன்படுத்திய சீக்கியத் துருப்புக்கள் ஏராளமான அப்பாவிச் சிங்களவர்களை சுட்டுக் கொன்று விட்டதாக அவர் முறைப்பாடு செய்தார்.

பிரித்தானிய அரசு அநகாரிக தர்மபாலாவின் பேச்சுக்களும் எழுத்துக்களும்- சிங்கள மக்களை தூண்டிவிட்டு தமது ஆட்சிக்கு எதிராக அவர்களை ஒன்று படுத்தி கிளர்ந்தெழச் செய்துவிடும் என்று கருதியது. அப்போது கல்கத்தாவுக்குச் சென்றிருந்த தர்ம பாலாவை 6 வருட காலத்துக்கு அங்கிருந்து இலங்கைக்கு வரவிடாமல் தடுத்து வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த விடயம் பற்றி பிரித்தானிய அரசுக்கு முறையிட்ட

இராமநாதன் கொழும்பு திரும்பிய போது, சிங்கள மக்கள் திரண்டு வந்து அவருக்கு வரவேற்பு அளித்தார்கள். பலர் அவரை தமது தோளில் தூக்கி வைத்து ஆனந்தக் கூத்தாடினார்கள்.



சேர். பொன்னம்பலம் இராமநாதன் 'அவரது இளமைக் காலத்திலிருந்தே அவரை எனக்குத் தெரியும். அவர் ஒரு துறவி. ஆனால் எரிச்சலூட்டக் கூடிய வருங்கூட. அவர் தனது நாட்டு மக்களையோ, பிக்குகளையோ தூண்டி விடக்கூடியவரல்ல. கடந்த 20 வருடங்களாக அவரது கருத்துக்களுக்கு செவி சாய்க்காமல் மக்கள் அவரை நிராகரித்துள்ளனர். அவரால் இலங்கையில் உண்டான தாக்கம் என்று கணிப்பிடுவதற்கு எதுவுமில்லை என்று எடுத்துக் கூறினார்.

உண்மையில் 19-ம் நூற்றாண்டின் இறுதி இரண்டு தசாப்த காலத்திலும் 20-ம் நூற்றாண்டின் முதல் இரண்டு தசாப்த காலத்திலும் அநகாரிக தர்மபால தென் இலங்கையில் ஏற்படுத்திய எழுச்சி, இராமநாதன் சொன்னது போல் கணிப்பிடுவதற்கு ஒன்றுமேயில்லாது என்று ஒதுக்கி விடத்தக்கதல்ல.

இது பற்றி மு. திருநாவுக்கரசு அவர்கள் இலங்கை இனப்பிரச்சினையின் அடிப்படைகள் என்ற நூலில் 'அநகாரிக தர்மபாலா இலங்கை வரலாற்றில் அடி ஆழத்தில் வேர் விட்டிருந்த சிங்கள பௌத்த வாதத்திற்கு நீரூற்றி புத்துயிரளித்த ஒருவராவர். தொடர்ச்சியாக இலங்கையிலிருந்து வந்த இந்திய

## சேர் பொன். இராமநாதனின் கனவான் அரசியல்

எதிர்ப்புக்கு நவீன வரலாற்றில் இவர் ஒரு முன்னோடியாவார். இவர் 'தர்மதீப' என்ற ஐதீகத்தை கையில் எடுத்து நவீன வரலாற்றுக்குரிய வகையில் அதைப் புதுப்பித்தார். ஐரோப்பியர் வருகையில் ஏற்பட்ட நவீன மாற்றங்களை உள்வாங்கி அதற்கேற்ப பௌத்தத்தை நவீனமயப்படுத்தினார். பௌத்த ஐதீகத்தை உயிர்ப்பித்ததும் பௌத்த மறுமலர்ச்சியின் ஓர் அங்கமாகும். இக்குறித்த ஐதீகத்தின் படி சிங்கள பௌத்தம் தவிர்ந்த ஏனைய இன, மத மொழிகள் இலங்கைக்கு அந்நியமானவை என்றும், 'அநகாரிக தர்மபாலா இலங்கையில் வாழ்ந்த ஏனைய இன, மதமக்களை நிராகரித்து சிங்கள பௌத்தத்தை மட்டும் மீள உயிர்ப்பிக்க முயன்றார். இதுவே இறுதியில் சிங்கள பௌத்த இனவெறியாக உருப்பெற்றது' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையில் கண்டியச் சிங்களவர்கள், கரையோரச்சிங்களவர்கள் என்று பிரிந்து கிடந்த சிங்கள மக்களை 'நாங்கள் சிங்கத்தின் இனம் - ஆரிய வம்சத்தவர்கள் தென்னிந்தியாவின் கீழ் சாதியினரான தமிழர்களும் தெருப் பொறுக்கிகளான முஸ்லீம்களும், சிங்கள இனத்துக்கு என்றுமே எதிரானவர்கள்' என்ற கோசங்களை முன்வைத்து நவீன காலத்தில் பௌத்த சிங்கள இன வாதத்திற்கு வித்திட்டவர் அநகாரிக தர்மபாலா.

அவருக்கு தென்னிலங்கையில் இருந்த மாபெரும் ஆதரவை, மறைத்து, தமிழர்களையும் எதிரிகளாக கருதும் அவரது நோக்கத்தை கணக்கில் எடுக்காது, அவரது கருத்தைக் கேட்பார் இலங்கையில் யாருமே இல்லை என்று இராமநாதன், பிரித்தானிய நிர்வாகத்திடம் வாதிட்டதற்கு காரணம், இனவாதம் பார்க்காத அவரது பெருந்தன்மை என்று சொல்லப்படுகிறது.

ஆனால் உண்மையில் அநகாரிக தர்மபாலாவின் பௌத்த மறுமலர்ச்சி இயக்கம், ஒரு புறம் பௌத்த சிங்கள இனவாதத்தைக் கொண்டிருந்தாலும், சாராம்சத்தில் ஓரளவுக்காவது, காலனிய எதிர்ப்பு அம்சம் சிங்கள தேசியத்தை வளர்த்தெடுப்பதற்கும் அடித்தளம் இட்டது.

ஆங்கிலக் கல்வி கற்று, ஆங்கிலேயர்களுடைய இரவல் மூளையில் சிந்திக்க தலைப்பட்ட சேர். பொன்னம்பலம் இராமநாதன் போன்ற யாழ்ப்பாணத்துக் கனவான்கள், ஆங்கிலேய எசமான்கள் அறிமுகப்படுத்திய பல இனங்கள், பல மதங்கள் கொண்ட நவீன தேசியத்தை அதாவது, 'சிலோன் தேசியத்தை' நிலை நிறுத்துவதற்காகவும் அந்த அமைப்பின் கீழ் நடைபெறும் பதவி நாற்காலிப் போட்டிகளில் பங்கெடுப்பதும் தங்களுடைய தலையாய கடமை என்றே நினைத்தார்கள். தமிழ் தேசியம் பற்றியோ, தமிழர்களுடைய எதிர் காலம் பற்றியோ அவர்கள் சிந்திக்கவேயில்லை. தென் பகுதியில் உருவாகி வந்த பௌத்த சிங்கள இனவாத எழுச்சிகளை ஆங்கிலேய எஜமானர்களின் மகிமையை அறியாத படிப்பறிவில்லாத மோட்டுச் சிங்களவர்களின் காட்டு மிராண்டி நடவடிக்கைகள் என்றே இவர்கள் பார்த்தார்கள்.

இராமநாதன் சிங்களவர்களுக்காக உயிராபத்தையும் பொருட்படுத்தாமல் லண்டனுக்குச் சென்று வாதிட்டதும், அநகாரிக தர்மபாலாவுக்காக வக்காலத்து வாங்கியதும், இரண்டு நோக்கங்களைக் கொண்டதாகவே பார்க்க வேண்டும்.

1. படித்த இலங்கையருக்கான ஆசனத்துக்கு நடைபெற இருக்கும் தேர்தலில், தனக்குப் போட்டியாக நிற்கக் கூடிய சிங்களத் தலைவர்களான சேர். மார்க்ஸ் பெர்ணாண்டோ, சேர்.ஜேம்ஸ் பீரிஸ் போன்றவர்களை தோற்கடிப்பதற்கு, சிங்கள வாக்காளர்களின் வாக்குகளைப் பெறுவது.
2. பௌத்த, சிங்கள தேசிய வாதிகளுக்கு நெருக்கடிகளை உண்டாக்கினால், அவர்களுக்கு ஆங்கிலேய ஆட்சி மீது வெறுப்பு வளரும். அந்த வெறுப்பு ஒரு தேசிய விடுதலை யுத்தத்திற்கு அவர்களை அணிதிரட்டி விடும். அவ்வாறு அவர்கள் அணி திரள்வது சிலோன் தேசியத்தை அளித்து விடும் என்று நம்பியது.

இராமநாதனின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட பிரித்தானிய அரசு, பௌத்த மறுமலர்ச்சி இயக்கத் தலைவர்களுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றியது.. சிறை வைக்கப்பட்டிருந்தவர்களை விடுதலை செய்யும் படி உத்தரவிட்டது. கொழும்பிலிருந்த தேசாதிபதியையும் திருப்பி அழைத்துக் கொண்டது.

தான் வந்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டு இராமநாதன் கொழும்பு திரும்பிய போது, சிங்கள மக்கள் திரண்டு வந்து அவருக்கு வரவேற்பளித்தார்கள். பலர் அவரை தமது தோளில் தூக்கி வைத்து ஆனந்தக் கூத்தாடினார்கள். பின்பு அவரை அலங்கரிக்கப்பட்ட தேர் ஒன்றில் இருத்தி குதிரைக்குப் பதிலாக தாங்களே அந்தத் தேரை கொழும்புத் துறைமுகத்திலிருந்து காலிமுகத்திடல் வரை இழுத்து வந்தனர்.

இராமநாதன் படித்த இலங்கையர்களுக்கான தேர்தலில் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட சிங்களத் தலைவரான சேர். மார்க்கஸ் பெர்ணான்டோவை தோற்கடித்து அவர் அமோக வெற்றியீட்டினார். ஒரு தமிழரை சிங்களவர்களும் தங்களது பிரதிநிதியாக ஏற்றுக் கொண்டு வாக்களித்து, தங்களுடைய பல்லின, பல மத மக்கள் இணைந்த புதிய தேசிய அமைப்புக்கு (சிலோன் தேசியம்) கிடைத்த வெற்றியென ஆங்கிலேயர்கள் கூறினார்கள்.

இராமநாதன் எதிர்பார்த்த படி சிங்கள வாக்காளரின் அமோகமான ஆதரவு அவருக்குக் கிடைத்தது. இச் சம்பவங்களின் பின் நடத்தப்பட்ட படித்த இலங்கையர்களுக்கான தேர்தலில் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட சிங்களத் தலைவரான சேர். மார்க்கஸ் பெர்ணான்டோவை தோற்கடித்து அவர் அமோக வெற்றியீட்டினார். ஒரு தமிழரை சிங்களவர்களும் தங்களது பிரதிநிதியாக ஏற்றுக் கொண்டு வாக்களித்து, தங்களுடைய பல்லின, பல மத மக்கள் இணைந்த புதிய தேசிய அமைப்புக்கு (சிலோன் தேசியம்) கிடைத்த வெற்றியென ஆங்கிலேயர்கள் கூறினார்கள்.

சோல்பரி கமரன் ஆணைக் குழுவின் ஆலோசனைகளின் பேரில்1912-ம் ஆண்டில் மறுசீரமைக்கப்பட்ட சட்ட நிரூபண சபையில் உத்தியோக பூர்வமான ஆங்கிலேய உறுப்பினர்கள் 11 பேரும், உத்தியோகப் பற்றற்ற உறுப்பினர்களாக கண்டியச் சிங்களவர் 2, கரையோரச் சிங்களவர் 1, தமிழர்கள் 2, முஸ்லீம்கள் 1, படித்த இலங்கையர் 1, கிராமப்புற ஐரோப்பியர்கள் 1. நகர்புற ஐரோப்பியர்கள் 1, பறங்கியர் (போர்த்துக்கேயர்கள்) 1, என்ற அடிப்படையில் 10 பேரும் தெரிவு செய்யப்பட்டனர்.

இத் தெரிவில் தமிழருக்கும் சிங்களவருக்கும் சமமான பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டதையிட்டு அக் காலத்து தமிழ் தலைவர்களான சேர் பொன்னம்பலம் இராமநாதன் போன்றோர் பெரும் திருப்தி கொண்டிருந்தனர். ஆங்கிலேயர்கள் நீதி தவறாதவர்கள் என்ற எசமான விசுவாசம் அவர்களிடம் நிறையவே இருந்தது. ஆனால் 21 பேர் கொண்ட சட்ட நிரூபண சபையில் 14 பேர் ஐரோப்பியர்களாக இருந்ததும், அதுவும் அதில் 11 பேர் முழு அதிகாரமும் உடையவர்களாக இருந்ததும், தெரிவு செய்யப்பட்ட 7 இலங்கையர்களும் வெறும் ஆலோசகர்களாக மட்டுமே இருந்ததும் இவர்களுக்கு பெரிய விடயமாகத் தெரியவில்லை. ஆனால் சிங்களவர்கள் மத்தியில் இந்த உணர்வு தீவிரமாக இருந்தது.

இது பற்றி மு. திருநாவுக்கரசு அவர்கள், இலங்கைத் தீவின் இனங்கள் இனப்பிரச்சினை என்பன பற்றி ஒரு 'வரலாற்று அறிமுகம்' என்ற நூலில் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

"சிங்கள பௌத்த இனவாதம் தெற்கில் தோற்றம் பெற்று வளர்ந்த போது தமிழர் பக்கம் நிலைமை எவ்வாறு இருந்தது என்பதை நோக்க வேண்டும். கொழும்பைச் சார்ந்த சிறு வர்த்தகம், வடக்கு கிழக்கிற்கு வெளியேயான உத்தியோகம், மற்றும் வேலை வாய்ப்புக்கள் என்பன பற்றி தமிழரின் அரசியல் பொருளாதார வாழ்வு திரும்பியது. ஆங்கிலேயருக்கு விசுவாசமுள்ள சேவகராய் தமிழர் பயபக்தியுடன் உத்தியோகத்தில் ஈடுபட்டனர், ஆங்கிலேயர்களால் உள்நாட்டிலும், நாட்டுக்கு வெளியிலும் (மலேசியா) தமிழர்கள் சிறந்த ஊழியர்கள் எனப் பாராட்டப்பட்டனர். வர்த்தகர்கள், உத்தியோகத்தர்கள், வழக்குரைஞர்கள் என் போரது நலன்களே அரசியலில் பெரிதும் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டது. இந் நலன்கள் வடக்கு கிழக்குக்கு வெளியே இருந்ததால் பிரதேச உணர்வு தமிழரின் அரசியலில் இல்லாதிருந்தது. சமூக கலாச்சார விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதில் அக்கறை காட்டப்படவில்லை." (பக் 16)

- நக்கீரன்